தாச்சண்யம்

யாரும் வர்றத்துக்குள்ளெ சாப்பிட்டு முடிச்சிறணுமேண்ணு தான் மீனம்மா தினோமும் நினைக்கிறது. அது யாராவது ஓர்த்தர் வராம இருக்கமாட்டாங்க.

நேரமும் வந்து அப்பிடி அமைஞ்சி போகுதெ.

அடையிற நேரத்துக்குத்தான் காட்லெயிருந்து வர முடியுது. பின்னெ வந்து... நாலும் பாத்து காச்சி முடிக்கணும்.

"ம்; வாங்கெ" என்று குரல் கொடுத்தாள்.

உட்காந்திருந்த இடத்திலிருந்து எழுந்து புறப்பட்டார் நண்டு நாய்க்கர்.

தடமாடி வர்றமா... தரித்தெறிஞ்சாலும் நாய்க்கரின் காலுக்குப் பார்வை தெரியும்.

முன்னாலெவந்து அமத்தலா உக்காந்து கும்பாவிலுள்ள கம்மஞ் சோத்து நடுவிலெ ஒரு அமுக்கு அமுக்கி பள்ளம் செய்தார். மீனம்மா ஓரகப்பைக் கறியை கொண்டுவந்து அந்தப் பள்ளத்திலெ ஊத்தி ரெப்புனா. ஆளுக்கு ஓரகப்பைக் கறிக்குமேலே எப்பவுங் கெடையாது. பலசரக்கும் கறி புளியும் விக்கிற வெலையிலெ என்னமுஞ் செய்ய ஏலுதா.

இதுக்குள்ளெதான் ஒப்பேத்தணும். மத்தப்படி..... மோரு தண்ணீங் கிற பெறப்பு எப்பவுங் கெடையாது.

புருசம் பெஞ்சாதி, மூணுபிள்ளெக. பிள்ளெக தீப்பெட்டி ஒட்டிச் சம்பாரிக்கி. அவ, காட்லெ வேலெ கெடைச்சா உண்டும்; இல்லாட்டி பிள்ளெகளோட 'பெட்டியடைக்க' உக்காந்துருவ.

அவருக்கு இருப்பு வாசத் திண்ணெதான். எப்படிக்கூடியும், ஓராளாவது நெலையம், பாக்க வந்துரும், கொஞ்சம், வெத்திலைப் பாக்கு. ஒரு பொடிப்பட்டை, கால்ரூவா தெச்சிணை. கால்ரூவா தான்...ண்ணாலும் சும்மாப்போகுதா? கறிக்குத் தேங்கா வாங்கிக் கிடலாமில்லெ.

அந்தப் பொடிப் பட்டைதான் உசுரு.

காலைலெ சிலதுநாளைக்கு நீத்துப்பாகம் மட்டுந்தாம். ராத்திரிக்கு பருக்கை மிஞ்சினா காலைலெ ஒருவா கஞ்சியும் கெடைக்கும். பெறவு..... வெளக்கு வைக்கிற நேரத்துக்குச் சாப்பிடுற ஒரு நேரத்துச் சாப்பாடுதாம்.

துட்டு பெறண்டா மதியத்துக்கு ஒரு 'சுடுதண்ணி' கெடைச்சாலுங் கெடைக்கும். மித்த நேரமெல்லாம் நகள்றது பல்லுலெ இளுகிற இந்த ஒரு சிமிட்டாப் பொடியிலெதாம்.

எப்படித்தாந் தொட்டுந்தொடாமலும் மந்திரிச்சாலும் கறி காங்க மாட்டேங்கு. கேட்டாலுங் கெடைக்காது. வழக்கமா செய்யிராப்லெ மிச்ச சோத்துக்கு தண்ணியெ விட்டு கரைச்சி உப்புக்கல்லு ஒண்ணெ வாயிலெ போட்டுக் கடிச்சிக்கிட்டு கும்பாவோட தூக்கிக்குடிக்க வேண்டியதுதானா. இண்ணைக்கி யாரும் வரமாட்டாகளா ... கடவுளே...

திடீர்ண்ணு அங்குவிலாஸ் போயிலை வாடை வருது!; 'வாருமய்யா சுப்பையாச் செட்டியாரே'

சாப்பிடுற பிள்ளைக தெகைஞ்சி திரும்பிப் பார்த்தா சுப்பையாச் செட்டியாரு வாசப்படியேறி வர்றது தெரியுது! "வாங்க; அண்ணாச்சி வாங்க" சம்பிரதாயத்துக்குச் சொன்னாள் மீனம்மா.

"ஆமாம்மா"

பிள்ளையள் குறுஞ்சிரிப்பாணியா தலையெக் கவுந்துக்கிருது.

"ம்; சாப்பாடு நடக்குதாக்கும்; நடக்கட்டும் நடக்கட்டும்"

"உக்காருங்க அண்ணாச்சி"

வந்தவர் உரல்லெ உக்காந்துக்கிறார்,

"மீனம்மா, கொஞ்..சம் கறி"

வந்தவர் திரும்பி கும்பாவைப் பார்த்தார்.

மீனம்மா அரை அகப்பையோ காலகப்பையோ கொண்டாந்து கும்பாவுலெ ஒரு இடிவச்சி கறி ஊத்துனது, அது நண்டு நாய்க்கருக்கு மட்டுந்தாந் தெரியும்.

◆

29 டிசம்பர் 1983